2411

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2015
**Year End Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 06 | විෂයය / பாடம் / Subject: கணிதம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I, II | කාලය / காலம் / Time: 2 மணித்தியாலம் |

பெயர் :- ............................................ சுட்டெண் :- ...........................

## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் இத் தாளிலேயே விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் 2 புள்ளிகள் வழங்கப்படும்.

(01) பின்வருவனவற்றுள் வட்டம் வரைய உபயோகிக்கக் கூடியவை எவை?

காப்பு, தாயக்கட்டை, பந்து, உணவு உண்ணும் தட்டு( Plate)

(i) ..........................................


(ii) ..........................................

HINDU COLLEGE
No.............
Date...........
Library
COLOMBO 4

(02) இவ்வருடம் ஏப்பிரல் முதலாம் திகதியை சர்வதேச நியமக் குறியீட்டில் எழுதுக.

(03) 2kg 25g ஐ கிராமில் எழுதுக.

(04) தரப்பட்ட முக்கோணியின் சுற்றளவை $x$ இன் உறுப்புகளில் எழுதுக.





(05) -3 இற்கும் +2 இற்கும் இடைப்பட்ட நிறையெண்கள் எல்லாவற்றையும் எழுதுக.

(06) a, b யினால் குறிக்கப்பட்ட கோணங்களின் வகைகளை எழுதுக.

a. ..........................................

b. ..........................................




(07) 6 நூறுக்கள் + 4 பத்துக்கள் +1 ஒன்றுக்கள் + இரண்டு $\frac{1}{10}$ கள் + ஐந்து $\frac{1}{100}$ கள் என்பவற்றால் குறிக்கப்படும் எண் யாது?

(08) x = 10 ஆகும் போது பின்வரும் அடசரகணிதக் கோவைகளின் பெறுமானங்களைக் காண்க.

(i) $x+3$ (ii) $x-8$


(09) உருவில் காட்டப்பட்ட நிழற்றிய பகுதியை மொத்த உருவின் பின்னமாக எழுதிச் சுருக்குக.



(10) 0.2, 0.22, 0.02 ஐ ஏறுவரிசையில் எழுதுக.

(11) 3 அப்பிள்பழங்களின் விலை ரூ 120 ஆகும். 7 அப்பிள் பழங்களின் விலை யாது?

(12) மேசை ஒன்றின் மீது வைக்கப்பட்டுள்ள கனவுரு ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. கனவுருவின் நிலைக்குத்து விளிம்புகள் எத்தனை?




(13) காலை 6 மணிக்குப் பின் 40 நிமிடங்களில் நிமலன் வீட்டிலிருந்து பாடசாலைக்குப் புறப்பட்டான். அவனுக்கு பாடசாலை செல்வதற்கு 28 நிமிடங்கள் எடுத்தன. பாடசாலையை அடைந்த நேரத்தை நியமக் குறியீட்டில் எழுதுக..

(14) (i) ஒழுங்கான நான்முகியில் எத்தனை முகங்கள் உண்டு?

(ii) ஒழுங்கான நான்முகியின் முகம் ஒன்றின் பருமட்டான உரு ஒன்று வரைக.

(15) (i) உருவின் சுற்றளவைக் காண்க.




(ii) இவ்வுருவின் பெயர் யாது?

(16) பின்வருவனவற்றுள் விகிதமாக எழுதக்கூடியவற்றை தெரிக.

(i) 3m துணியின் விலை ரூ 300

(ii) எனது நிறை எனது சகோதரியின் நிறையின் மூன்று மடங்கு


(iii) ரூ 1000 ஐ வங்கியில் வைப்பு செய்த ஒருவருக்க ஒரு வருட இறுதியில் கிடைக்கும் வட்டி ரூ 100

(17) பொருத்தமான பெறுமானத்தை இடைவெளியில் எழுதுக.

(i) $52 \times 100$ = ..........................................

(ii) $7300 \div 10$ = ..........................................

(18) எண்கோட்டில் குறிக்கப்பட்ட எண்களைக் கொண்டு இரண்டு சமனிலிகளை எழுதுக.




1. ......................................................    2. ......................................................

(19) வகுப்பு ஒன்றிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டும் போது 40 ஆகும். அவ் வகுப்பிலிருந்து ஒரு மாணவன் பாடசாலையை விட்டு விலகிய பின் கிட்டிய 10 இல் மாணவர் எண்ணிக்கை 30 ஆகும். தற்போது வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை யாது?

(20) 0, 2, 3, 6 என்னும் இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய சிறிய எண்ணாகவும் 6 என்னும் இலக்கம் நூறினிடத்தில் உள்ளதுமான எண்ணை எழுதுக.

## பகுதி II

- முதலாம் வினாவிற்கும் மேலும் 4 வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை எழுதுக.
- முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனையவற்றிற்கு 11 புள்ளிகளும் வழங்கப்படும்.

(01) "தரவுகளைச் சேகரித்தலும் வகை குறித்தலும்" என்னும் பாடத்திற்காக ஆசிரியரின் உதவியுடன் நீர் செயற்பாட்டில் ஈடுபட்டதை நினைவு கூர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(a) (i) அவதானித்து தரவுகள் சேகரிக்கும் இரண்டு சந்தர்ப்பங்களை எழுதுக.

(ii) இவ்வாறான தரவுகளைச் சேகரிக்கும் போது உமக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் இரண்டு எழுதுக..

(b) 30 மாணவர்கள் உள்ள வகுப்பு ஒன்றில் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் பின்வருமாறு

3, 4, 3, 2, 4, 5, 4, 5, 4, 4
5, 3, 4, 4, 4, 3, 4, 2, 3, 5
4, 4, 3, 5, 4, 4, 3, 4, 5, 3

(i) பின்வரும் அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதி செய்து பூரணப்படுத்துக.

| குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை | வரவுக்குறி | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

(ii) இரண்டு குடும்பங்களை  என்னும் குறியீட்டின் மூலம் குறித்து மேற்படி தரவுகளுக்கான பட வரைபை வரைக.

(c) (i) தரவுகளை வகைகுப்பதற்காக அட்டவணைகளும், பட வரைபுகளும் பயன்படுத்துவதன் முக்கியம் ஒன்று எழுதுக

(ii) இவ்வகுப்பு மாணவர்களின் குடும்ப அங்கத்தவரின் மொத்த எண்ணிக்கை யாது?

(02) (a) முக்கோணி வடிவிலான புள்ளிக் கோலம் ஒன்று பின்வருமாறு



(i) இக் கோலத்தில் அமைந்த எண்களின் சிறப்புப் பெயர் யாது?

(ii) இக் கோலத்தின் எட்டாம் உறுப்பு யாது?

(iii) இக் கோலத்தின் மூன்றாம், நான்காம் உறுப்புக்களைக் கூட்டுவதால் கிடைக்கும் எண் எத்தனையாவது சதுர எண் ஆகும்.

(b) (i) 1 தொடக்கம் 10 வரையுள்ள முதன்மை எண்களை எழுதுக.

(ii) 10 என்ற எண்ணின் இருபுறமும் அமைந்த இரு சேர்த்தி எண்களையும் எழுதுக.

(iii) 28 இன் மிகச்சிறிய, மிகப்பெரிய காரணிகளை எழ்துக.

2311

(03) (a) குறித்த கடையொன்றில் காட்சிப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் பின்வருமாறு

| பொருள் | அளவு | விலை(ரு) |
|---|---|---|
| அரிசி | 1kg | 90.00 |
| பருப்பு | 500g | 130.00 |
| சீனி | 1kg | 80.00 |

சௌமியாவின் அம்மா 5kg அரிசி, 750g பருப்பு, $1\frac{1}{2}$ kg சீனி என்பவற்றை இக்கடையில் வாங்க வந்தார்.

(i) சௌமியாவின் அம்மா வாங்கி வந்த பொருட்களின் மொத்த நிறை யாது? (2 புள்ளி)

(ii) இதற்காக கடைக்குச் செலுத்த வேண்டிய பணம் யாது?

(iii) மேலே (ii) இலுள்ள தொகையைக் கொடுப்பதற்கு அவர் 1000 ரூபாத் தாளைக் கடைக்கக் கொடுத்தால் பெறும் மீதிப் பணம் யாது?

(b) பத்திரிகை ஒன்றில் அச்சிடப்பட்டிருந்த எண் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

2360001457

(i) இதனை வலயங்களாக வேறுபடுத்துக.

(ii) இவ்வெண்ணை சொற்களில் எழுதுக.

HINDU COLLEGE
No.............
Date...........
Library
COLOMBO - 4

(04) (a) (i) பகுதி எண் 5 ஆகவுள்ள முறைமைப்பின்னங்கள் 2 எழுதுக.


(ii) $\frac{9}{36}$ என்பதன் எளிய வடிவிலுள்ள சமவலுப்பின்னம் ஒன்றை எழுதுக

(iii) $\frac{1}{2}, \frac{1}{7}, \frac{1}{4}$ என்பதை ஏறுவரிசையில் எழுதுக.

(b பெறுமதி காண்க.

(i) $\frac{1}{5} + \frac{3}{10}$ (3 புள்ளி) (ii) $\frac{2}{3} - \frac{5}{12}$

(05) (a)




படத்தில் காட்டப்பட்டுள்ள சிறிய சதுரங்களின் நீள, அகலங்கள் 1cm ஆகும்.


(i) சிறிய சதுரத்தின் பரப்பளவு யாது?

(ii) A என்னும் உருவின் பரப்பளவு யாது?

(iii) B என்னும் உருவின் பரப்பளவு யாது?

(iv) A, B யின் பரப்புகளை விகிதமாக எழுதி எளிய வடிவில் எழுதுக.

(b)




(i) x, y ஆகிய பாத்திரங்களிலுள்ள நீரின் மொத்த அளவு யாது?

(ii) x என்னும் பாத்திரத்தில் y ஐ விட மேலதிகமாகவுள்ள நீரின் அளவு யாது?

(06) (a) (i) $5^3$ என்னும் எண்ணின் அடி யாது? சுட்டி யாது?

(ii) $5^3$ என்பதை சொற்களில் எழுதுக.

(iii) 81 ஐ 3 இன் வலுக்களில் எழுதுக.

(iv) $2^3 \times 3^2$ என்பதன் பெறுமதி யாது?


(b) பின்வரும் எண்களை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

275, 302, 457, 900, 408, 115

(i) 2 ஆல் வகுபடும் எண்களைத் தெரிந்து எழுதுக.

(ii) 5 ஆல் வகுபடும் எண்களைத் தெரிந்து எழுதுக.

(07) (a) ரிஷாட், மலித், வினோதன் என்பவர்களின் வயதுகள் எண் கோட்டில் காட்டப்பபட்டுள்ளது.




(i) ரிஷாட்டின் வயது யாது?

(ii) வினோதனின் வயது மலித்தின் வயதை விட எத்தனை வருடங்கள் அதிகம்?

(iii) தருஷியின் வயது வினோதனின் வயதை விட 3 வருடங்கள் குறைவானது ஆயின், எண்கோடு ஒன்று வரைந்து அவரின் வயதைக் குறிக்க.

(b) (i) 25 . 37 என்னும் எண்ணை எண்சட்டம் ஒன்றில் குறிக்க.

(ii) பெறுமதி காண்க.

3. 28 + 5. 74

(iii) சுருக்கி எழுதுக

7. 23 - 4. 57

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

2579

බස්නාහිර පළාත අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2014
**Year End Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 06 | විෂයය / பாடம் / Subject: கணிதம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I, II | කාලය / காலம் / Time: 02 மணித்தியாலம் |

பெயர் :- ........................................................................ சுட்டெண் :- ..........................

## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வோர் வினாவின் விடைகளுக்கு 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.


(01) தரப்பட்ட எண்ணைச் சொற்களில் எழுதுக.

682 450

(02) கீழே உள்ள எண்களை கிட்டிய 10 இற்கு மாற்றி எழுதுக.

(i) 93 (ii) 147

(03) படத்தில் காட்டிய செவ்வக உருவின் பரப்பளவு யாது?




(04) சூழலிலுள்ள அமைப்புக்களில் அதிகமாகக் காணப்படும் கோணம் யாது?

(05) சம வாய்ப்புள்ள நாணயம் ஒன்றை நிமலன் ஒரு தடவை சுண்டுகின்றான். கிடைக்கத்தக்க பேறுகளை எழுதுக.

(06) திசைகளை அறிவதற்குப் பயன்படும் உபகரணத்தின் பெயர் யாது?


(07) கூட்டி எழுதுக. $\frac{1}{9} + \frac{2}{9}$

(08) கீழே தரப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு 0-10 அளவிடையில் புள்ளிகள் வழங்குக.


(i) சூரியன் கிழக்கே உதித்தல்

(ii) $a = 3$ ஆகும்போது $a + 5$ இன் பெறுமதி 10 ஆதல்


(09) தரப்பட்ட முக்கோணியின் சுற்றளவைக் காண்க.



(10) கீழே காட்டப்பட்டுள்ள நேர்கோட்டுத் தளஉருக்களின் பெயர்களை எழுதுக.

(i) 

..........................

(ii) 

..........................

(11) 5cm நீளமுடைய AB என்னும் நேர்கோட்டுத் துண்டம் ஒன்று வரைக.

(12) A = { 10 இலும் குறைந்த சதுர எண்கள் }. A என்னும் தொடையிலுள்ள மூலகங்களை எழுதுக.

(13) நான்முகி ஒன்றிலுள்ள விளிம்புகள், உச்சிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையை எழுதுக.

(i) விளிம்புகள் (ii) உச்சிகள்

(14) 0.5 $l$ என்பதை மில்லிலீற்றரில் எழுதுக.

(15) 6 இன் காரணிகளை எழுதுக்.

(16) 2.02 kg என்பதை கிராமில் தருக.

(17) பின்வரும் கூற்றுக்களில் விகிதங்களாக எழுதக் கூடியவற்றின் கீழ் கீறிடுக.


(i) மாலாவின் உயரம் சாமாவின் உயரத்தைப் போல் இருமடங்காகும்.

(ii) நிமலன், சரத்தைவிட எடை குறைவானவன்.

(iii) ராஜாவின் வருமானம் சிவாவின் வருமானத்தைவிட அதிகமானதாகும்.

(iv) கமலாவின் வயது விமலாவின் வயதுக்குச் சமனாகும்.

(18) பின்வரும் வரவுக்குறிகளால் காட்டப்படும் எண்ணை எழுதுக.



(19) $16m^2$ பரப்பளவுடைய சதுரவடிவான அறை ஒன்றின் ஒருபக்க நீளம் யாது?

(20) $a^3 + b^3 = 65$ ஆயின் a, b இற்குப் பொருத்தமான இரு எண்கள் எழுதுக.

a = b =

## பகுதி II

- முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்குரிய விடைகளை வேறு தாளில் படிமுறைகளுடன் எழுதுக.
- முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய வினாக்களின் விடைகளுக்கு 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்

(01) (a) "அட்சரகணித கோவைகள்" என்னும் அலகு தொடர்பான கணிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்காக ஆசிரியரின் உதவியுடன் நீர் **பாத்திரமேற்று நடித்தல்** மூலம் செயற்பாட்டை முன்வைத்ததை நினைவு கூர்க.
பாத்திரமேற்று நடித்தலுக்காக நீர் ஆயத்தமான விதத்தை மூன்று படிமுறைகளாக எழுதுக.


(b) மாணவர் குழு ஒன்று மேற்கூறிய "பாத்திரமேற்று நடித்தல்" என்ற செயற்பாட்டிற்காக தயாரித்த சில அட்டைகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| $x$ | 3 | b | + | 2 |
| - | y | a | 5 | 1 |

(i) மேலேஉள்ள அட்டைகளில் அட்சரகணித குறியீடுகளைத் தெரிந்து எழுதுக.
(ii) கணிதக் குறியீடுகளைத் தெரிந்து எழுதுக.
(iii) மேலே உள்ள தரவுகளை மாத்திரம் உபயோகித்து எண் சமன்பாடுகள் இரண்டு எழுதுக.
(iv) மேலே தரப்பட்ட தரவுகளை மாத்திரம் உபயோகித்து ஐந்து அட்சரகணித கோவைகள் எழுதுக.

(02) (a) (i) (-5) இலிருந்து (+5) வரை உள்ள எண்கோடு ஒன்று வரைக.
(ii) (-3) , 0 , (+1) என்னும் புள்ளிகளை நீர் வரைந்த கோட்டின் மீது குறிக்க.
(iii) >,< என்னும் குறியீடுகளை உபயோகித்து நீர்குறித்த புள்ளிகளை ஒப்பிடுக.

(b) உருவில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்ட கோணங்களின் வகைகளை எழுதுக.




a. ..............................
b. ..............................
c. ..............................
d. ..............................

(03) (a) சுருக்கி எழுதுக. (i) $\frac{1}{5} + \frac{9}{20}$ (ii) $\frac{7}{10} - \frac{2}{5}$

(b) பாடசாலைப் பரிசளிப்பு வைபவம் ஒன்றின் நிகழ்ச்சி நிரலின் ஒருபகுதி பின்வருமாறு அமைந்திருந்தது.

பி.ப. 2.00 மணி பிரதம அதிதி வருகை
பி.ப. 2.05 மணி பிரதம அதிதியை மேடைக்கு அழைத்தல்
பி.ப. 2.15 மணி வரவேற்பு உரை
பி.ப. 2.20 மணி சான்றிதழ் வழங்கல்

மேலே உள்ள நிகழ்ச்சி நிரலை உபயோகித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) பிரதம அதிதி வருகை தரும் நேரத்தை **24 மணித்தியாலக்** கடிகார முறையில் எழுதுக.
(ii) வரவேற்புரைக்கு ஒதுக்கப்பட்ட நேரம் எத்தனை செக்கன்கள்?
(iii) இந் நிகழ்வு ஆனது 1650h இற்கு நிறைவு பெற்றது ஆயின் விழா நடைபெற எடுத்த நேரம் எவ்வளவு என்பதை மணித்தியாலம் நிமிடம் ஆகியவற்றில் தருக.

(c) எமது நாளாந்த வாழ்வில் திசைகளை உபயோகிக்கும் சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக.

(04) (a) கீழே தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் (T) எனவும் பிழையாயின் (F) எனவும் குறிக்க.

(i) முக்கோணி ஒன்றின் பக்கங்களின் நீளங்கள் சமனாகும்.

(ii) ஏதாவது இரண்டு ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை இரட்டை எண்ணாகும்.

(iii) வட்டத்திற்கு பல சமச்சீரச்சுக்கள் உண்டு.

(iv) முதலாவது சேர்த்தி எண் 4 ஆகும்

(v) சதுரமுகி ஒன்றிற்கு 8 முகங்கள் உண்டு.

(b) (i) 3.12 என்ற எண்ணை எண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.

(ii) சுருக்கி எழுதுக. 9.7 - 4.18

(c) 3kg சீனியின் விலை ரூ. 315 ஆயின் 5kg சீனியின் விலை யாது?

(05) (a) கலவன் பாடசாலை ஒன்று பெற்றுக்கொண்ட சீருடைத் துணிகள், விநியோகித்தபின் எஞ்சியவை பற்றிய விபரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது. பெட்டி ஒன்றினுள் 50 மாணவர்களுக்கான சீருடைகள் காணப்பட்டன. பாடசாலையிலுள்ள மாணவர்கள் அனைவருக்கும் சீருடைகள் வழங்கப்பட்டன.

| | தரம் 1 - 5 | தரம் 6 - 9 | தரம் 10 - 13 |
|---|---|---|---|
| சேட் துணிகள் அடங்கிய பெட்டிகளின் எண்ணிக்கை | 6 | 5 | 4 |
| காற்சட்டைத் துணிகள் அடங்கிய பெட்டிகளின் எண்ணிக்கை | 6 | 5 | 4 |
| பெண்களுக்கான சட்டைத் துணிகள் அடங்கிய பெட்டிகளின் எண்ணிக்கை | 5 | 7 | 3 |
| எஞ்சிய துணிகள் | காற்சட்டைத் துணிகள் - 22<br>சேட்துணிகள் - 22<br>சட்டைத்துணிகள்- 41 | — | காற்சட்டைத் துணிகள் - 18<br>சேட்துணிகள் - 18<br>சட்டைத்துணிகள்- 25 |


(i) பாடசாலைக்குக் கிடைக்கப்பெற்ற பெட்டிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(ii) பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகளின் எண்ணிக்கை யாது?

(iii) இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவரின் மொத்த எண்ணிக்கை யாது?

(b) 300 g, $1\frac{1}{2}$ kg என்பவற்றை விகிதமாக எழுதி எளிய வடிவில் எழுதுக.

(06) துவிச்சக்கர வண்டிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றில் 6 மாத காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டிகளைப் பின்வரும் படவரைபு காட்டுகிறது.




ஆவணி மாதத்தில் 175 துவிச்சக்கரவண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன.


(i) எந்த மாதத்தில் அதிக எண்ணிக்கையான வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

(ii) எம்மாதங்களில் சம எண்ணிக்கையான வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

(iii) இந்த 6 மாத காலப்பகுதியில் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட வண்டிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(iv) தொழிற்சாலை வண்டி ஒன்றை விற்பதன் மூலம் ரூ. 750 இலாபமாகப் பெற்றுக் கொள்கிறது. இக் காலப்பகுதியில் வண்டிகளை விற்பதன் மூலம் தொழிற்சாலை பெறும் மொத்த இலாபம் யாது?

(07) தரப்பட்ட கணிதக் குறுக்கெழுத்துப் புதிரை உமது விடைத்தாளில் பிரதி செய்க. வெற்றுக் கட்டம் ஒன்றில் ஒரு இலக்கம் வரக்கூடியவாறு அதனைப் பூர்த்தி செய்க.




இடமிருந்து வலமாக

(1) 6 வது சதுர எண்ணுடன் 5 கூட்டப்பட்டுள்ளது.

(4) 9 இன் மடங்கு

(5) 4,8,6,5 என்னும் எண்களை உபயோகித்து எழுதக் கூடிய மிகப் பெரிய எண்.

மேலிருந்து கீழ்

(2) 36 இன் இரண்டாம் வலு.

(3) 50 இலும் கூடிய சிறிய முதன்மை எண்

2749